Arimā Nōkku

# அரிமா நோக்கு

ISSN 2320-4842

7:4 ஜனவரி 2014

ரூ.30

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

ISSN 2320-4842

அரிமா நோக்கு
7:4 சனவரி 2014

காண்டேகர்
- வ. ஜெயதேவன் 03

மிகெய்ல் பக்தின் நோக்கில் தொல். கிளவியாக்கம்
- கே. பழனிவேலு 04

பிராகிருதத்தில் தமிழ் அகமரபு: அகநானூறும் காதாசப்தசதியும்
- ப. மருதநாயகம் 11

Reflexive Expressions in Modern Tamil
- Pawathy Nalliannan & K. Karunakaran 19

கேட் மில்லட்
- இரா. பிரேமா 23

கம்பராமாயண உவமை நயத்தில் அறம் - இரா. மகாலட்சுமி 28

சூரியகாந்தனின் நாவல்களில் உத்திகள் - மொ. தங்கவேல் 33

சங்கஇலக்கியத்தில் பண்டமாற்று
- ஆர். கிரிஜா 36

குறுந்தொகையில் நோக்கு
- இரா. மோகன் 41

சூழலியல்நோக்கில் ஐங்குறுநூறு
- இரா. விஜயராணி 46

The Relationship Between HM's Leadership & Work Satisfaction among Tamil School Teachers
- K. P. Raman 53

வழிவிடுங்கள்-கவிதைநூல்: ஒரு பார்வை
- மருதூர்அரங்கராசன் 60

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## தம் குற்றம் மறந்த கருப்புத் தவளைகளின் பல்லவி

கருப்புப் பணம் விளையாடுகிற வேளையும் அவ்விளையாட்டுக்கு முடிவு கட்டப்போவதாக அரசும் கட்சிகளும் முரசறையும் வேளையும் நாட்டில் தேர்தல் கள் நடைபெறும் நன்னேரங்களாகவே நாம் கண்டுவந்துள்ளோம். கருப்புப்பணம், கள்ளப்பணம், கணக்கிற்கு வராத பணம் என்னும் பெயர்கள் பல பூண்டு அரசி யலை, வாணிகத்தை, தொழில்களை உருவாக்கியும் உருக் குலைத்தும் பொதுச் சமூகத்தை ஆட்டிப்படைத்து வருகின்ற இது நம் நாட்டில் இணைப்பொருளாதாரச் சக்தியாக வலுப் பெற்றுள்ளதை மறுக்க இயலாது.

வருமானவரி, வாணிகவரி, சுங்கவரி, சொத்துவரி என வரிசைப்படும் வரிகளை ஏன் கட்டுவோம் என்னும் வரிகொடா இயக்க வல்லாளகண்டர்கள் செயற்பாடு களால் மட்டுமன்றி-தங்கம், வைரம் கடத்தல்-ஆடம்பரப் பொருள்கள் கடத்தல் ஆகியவற்றாலும் செல்வாக்கு மிக்கவர்கள் உரிமங்கள், ஒதுக்கீடுகளைத் தேவைக் கதிகமாகப் பெற்று அவற்றை இரண்டாம் மூன்றாம் கைகளுக்குக் கொள்ளை மிகுபணத்திற்கு விற்றுக் குறுக்குவழித் திருவிழா நடத்துவதாலும் கருப்புப் பணம் உருவாகிறது என்று பொருளாதாரம் படித் தவர்கள் சொல்கின்றனர்.

கொடுமன வாணிகக் கொள்ளையர்களும் கடத்தல் கும்பலர்களும் கையூட்டுக்கு வாய்பிளந்து காத்திருக்கும் அதிகாரக் கேடர்களும் மனச்சான்றுக்கு மலர் வளை யம் வைத்துவிட்டுக் கருப்புச் சொத்துக்களின் அதிபதிகளாக வளர்ந்து விட்டனர். அரசியல் உலகில், கட்சிகளும் வேட்பாளர்களும் தேர்தல் செலவு செய்யக் கருப்புப் பணதையே நம்பியுள்ளனர். கருப்பை வெள்ளையாக்கவும் தேர்தல் களம் ஒரு வாய்ப்பல்லவா?

ஆனால், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள கருப்புப் பணத்தை வெளியே கொண்டுவந்தே தீருவோம் என்று கட்சிகள் ஒரு கண்டிப்பான குரலில் பேசு கின்றன. தேர்தல் காலத்தில்தான். சுவிசு வங்கிகளில் குவிக்கப்பட்டுள்ள கருப்புப் பணத்தை மீட்போம் நாட்டுவளத்தைப் பெருக்குவோம் என்று பிசிறடிக்காமல் பேசுகின்றன.

ஏதோ பாலாற்றைத் தேனாற்றை சுவிசிலிருந்து இந்தியாவின் பக்கமாய்ப் மடை மாற்றிப் பாயவிடுவதுபோன்ற பாவனையில். பெருமுதலாளிகள் கருப்புப் பணம், இழப்பீடு தராமல் பறிமுதல் செய்யப்படும் என்று மிரட்டுவதுபோன்ற பொய்க் குரல் ஒருபக்கம் அதிர்வதும் உண்டு.

நம் நாட்டில், மக்கள்தொகையில் ஏறத்தாழப் பாதி அளவினர் பசியின் புத்திர புத்திரிகள். வறுமைக் கோட்டுக்குக் கீழே 70 கோடி இந்தியர்கள். 20 உருபாயை நாளூதியமாகப் பெற்று நாளைக் கடத்தும் நலிந்த நிலை.

அறம்பிழைத்த அரசியல்வாதிகள், விதிமுறைகளை வளைக்கும் வித்தகம் வல்ல அதிகார வர்க்கம், பிரமாண்டக் கலையுலக, விளயாட்டு உலகப் பிரபலங்கள் இரக்கமற்ற மூலதனக் கொள்ளையர்கள் ஆகியோர் பதுக்கி வைத்துள்ள கருப்புப் பணம் மட்டுமே 64 இலக்கம் கோடி.

இந்தியா உலகவங்கி உலகவர்த்தக அமைப்புகள் ஆகியவற்றுக்குப் பட்டிருக்கும் கடன் 4.87 இலக்கம் கோடி. சுவிசு வங்கிகளில் இந்தியர் களை ஏமாற்றி இந்தியர்கள் பதுக்கிவைத்துள்ள பணம் மேலே காட்டிய மொத்தக் கடன் தொகையைக் காட்டிலும் 13 மடங்கு அதிகம்.

இந்தியா பட்ட கடனை எளிநிலை வர்த்தகர்கள் சிறுதொழில் முயற்சியாளர்கள், நிலத்தோடு மல்லாடும் உழவர்கள் ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள் மருத்துவர்கள் போன்றோர் நாட்டுப்பற்றோடும் நாணயத்தோடும் வரிசெலுத்தி அடைக்க வேண்டிய கட்டாய நிலை.

→

ISSN 2320-4842

இன்று வளர்ந்தநாடுகள்கூட சுவிசு வங்கிகள் பக்கம் பார்வையைத் திருப்பியுள்ளன. சுவிசு வங்கிகளும் தம்மிடம் பணம்போட்டிருப்பவர் பெயர்களைவெளியிட முன்வந்துள்ளன.

இந்தியாவுக்கான சுவுசு நாட்டுத் தூதர் பிலிப் இந்தியாவிடமிருந்து கோரிக்கை எதுவும் வரவில்லை; வந்தால் சட்டப்படி நடவடிக்கை தொடங்குவோம் என்கிறார் அதற்கு எதிர்வினை இல்லை. ஆனால் இங்குள்ள எல்லா அரசியல் கட்சிகளும் ஒரே குட்டைத் தவளைகளாகித் தேர்தல் பருவத்தில் திரும்பத்திரும்பப் பாடும் பல்லவி:

*'சுவிசுவங்கிகளில் முடங்கியுள்ள கருப்புப்பணத்தைக் கைப்பற்றுவோம்.'*


**ஆசிரியர்**

ஈரோடு தமிழன்பன்

**இணையாசிரியர்**

(மதிப்புறு நிலை)

வ. ஜெயதேவன்

**ஆசிரியர் குழு**

சிலம்பொலி சு. செல்லப்பன்

கா. செல்லப்பன்

இரா. இளவரசு

நா. கணேசன் (அமெரிக்கா)

நா. சுப்பிரமணியன் (கனடா)

பொன். செல்வகணபதி

நா. முத்துக்குமார்

சீதாலட்சுமி (சிங்கப்பூர்)

மு. பரமசிவம் (மலேசியா)

பத்மாவதி விவேகானந்தன்

இரா. பிரேமா

பா. இரவிக்குமார்

மருதூர் அரங்கராசன்

பெ. இலக்குமிநாராயணன்

எஸ். ஏ. சங்கரநாராயணன்

**அறிவுரைக் குழு**

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

**பதிப்பாளர்**

இரா. பன்னிருகைவடிவேலன்


# கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| வாழ்நாள் கட்டணம் | ரூ. | 3000/- | US $ 150 |
| புரவலர் கட்டணம் | ரூ. | 5000/- | US $ 200 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. | 10,000/- | US $ 500 |

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் உண்டு.
- புரவலர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 40% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

**விளம்பரக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 15,000 |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 10,000 |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 3,000 |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 1,500 |

*தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.*

**கட்டணம் செலுத்த:**

**DD in favour of *'Nokku'* payable at Chennai**

**Indian Overseas Bank (IFSC Code: IOBA0001681)**

**S.B. A/c No. 168101000006423**


## அரிமா நோக்கு

4/1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை

கொட்டிவாக்கம், சென்னை 600 096

வலைத்தளம்: www. arimaanokku.com

மின் அஞ்சல்: arimaanokku@hotmail.com செல்: 9380626448